# தமிழ்நாட்டை ஆட்சி செய்வது யார் என்று மக்களுக்குத் தெரியும்!

தமிழ்நாட்டை ஆட்சி செய்வது யார்? என்ற தலைப்பில் அவதூறுகளை தொகுத்து, தன் வன்மங்களை கட்டுரையாக வடித்துள்ளது விகடன்.

தமிழ்நாட்டில் நடப்பது யாருடைய ஆட்சி, அது எத்தகைய ஆட்சி என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு உணர்ந்ததால் தான், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யில் 40 தொகுதிகளையும் வாரி வழங்கினார்கள். சங் பரிவார சதிகளை முறியடித்து, பல்முனை அரசியல் தாக்குதல்களை எதிர்த்து, அரசமைப்பு நிறுவனங் களின் இடையூறுகளை மீறி பெற்ற வெற்றி அது. ஆட்சி மீது வைக்கப்பட்ட அத்தனை அவதூறுகளையும் அடித்து நொறுக்கி மக்கள் அளித்த வெற்றி, தி.மு.க. தலைவர் மீதான நம்பிக்கையின் அடையாளம், மூன்று ஆண்டு கால 'திராவிட மாடல்' ஆட்சியின் செயல்பாட்டிற்கான அங்கீகாரம்.

திராவிட முன்னேற்றக் கழகம் தொடர் வெற்றிகளைப் பெற்று வரலாறு படைத்து வருகிறது. எதிர்க் கட்சிகள் சேர்ந்து நின்றாலும் தோல்வி, பிரிந்து நின்றாலும் தோல்வி என்று திணறத்தக்க வகையில் தனிப்பெரும் தலைவராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை மக்கள் கொண்டாடி வருகிறார்கள். இதனை பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் தங்கள் ஆற்றாமையை வெளிப்படுத்துகின்றனர். அதனை பொதுவான குரலாக கட்டமைக்க முற்படுகின்றனர்.

**இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு ஊடகங்களுக்கு உயரிய மதிப்பு வழங்கப்பட்டு வருகிறது. அவை சுட்டிக்காட்டும் குறைகள் உடனுக்குடன் சீர் செய்யப்படுகின்றன. ஆனால் அடிப்படை தரவுகள் அனைத்தையும் இடது கையால் புறந்தள்ளிவிட்டு, தான் திணிக்க விரும்பிய கருத்தை விஷமத்துடன் வடித்த கட்டுரைக்கு என்ன மதிப்பை கொடுக்க முடியும் ?**

**அறிந்தே அவதூறு பரப்பும் விகடனுக்கு எந்த பதிலும் பயன்படப் போவதில்லை. ஆனால் அதனால் சமூகத்தில் ஏற்படும் ஐயங்களைப் போக்க வேண்டிய கடமை நமக்கு உள்ளது. அதன் பொருட்டு சில குறிப்புகளை இங்கே தருகிறோம்.**

1) "தேசிய குற்ற ஆவணக் காப்பக அறிக்கை, 'பெண்களுக்கு நாட்டிலேயே சென்னைதான் பாதுகாப்பான நகரம்' என்று சொல்கிறது." சென்னை மாநகரக் காவல் ஆணையராக இருந்து மாற்றப்பட்ட சந்தீப்ராய் ரத்தோர் இப்படி பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்"

"2023 ஜனவரி முதல் ஜீன் வரையிலான ஆறு மாத காலத்தில் 63 கொலைகள் நடந்தன. ஆனால் இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் 58 கொலைகள்தான் நடந்துள்ளன. தலைநகரில் கொலைகள் குறைந்துவருகின்றன என்பதற்கு இந்தப் புள்ளிவிவரங்கள் சாட்சி" எனவும் தனக்குத் தானே நற்சான்றிதழ் கொடுத்துக்கொண்டுள்ளார்.

மேற்கண்ட இரண்டும் விகடனின் வாசகங்கள். சென்னை தான் இந்தியாவில் பெண்களுக்கு பாதுகாப்பான நகரம் என்பதோ, கடந்த ஆண்டை விட தலைநகரில்கொலைகள் குறைந்துள்ளன என்பதோ காவல் ஆணையரின் சொந்த கருத்து அல்ல, பொய்யான செய்தியும் அல்ல. தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் அறிக்கை அடிப்படையில் முன்வைக்கப்பட்ட உறுதியான உண்மை.

இது ஆணையரின் பெருமை அல்ல, தமிழ்நாட்டின் பெருமை. ஆணையர் வழங்கிய சுயச்சான்றிதழ் அல்ல, அரசின் அதிகாரப்பூர்வ தரவுகள் வழங்கும் உண்மை சான்றிதழ்.

**ஆணையரின் கருத்து தவறானதாக இருந்தால், நேர்மையான ஊடகம் என்ன செய்ய வேண்டும் ? அவர் குறிப்பிட்ட புள்ளி விவரங்கள் தவறு என்பதை நிரூபித்துவிட்டு விமர்சிக்க வேண்டும், உண்மையான தரவுகளை முன்வைக்க வேண்டும். அதற்கான எந்த முயற்சியை யும் எடுக்காமல், உண்மை நிலை நீங்கள் விதைக்க விரும்புகிற கருத்துருவாக்கத்திற்கு எதிராக இருப்பதை ஜீரணிக்க முடியாமல், அடிப்படை தரவுகளை புறந்தள்ளு வது எந்த வகையில் அறம்.**

**விகடன் விரும்பினாலும் விரும்பா விட்டாலும், சென்னை பெண்களுக்கு பாதுகாப்பான நகரம் என்பதும், தலை நகரில் கொலைகள் குறைந்து வருகின்றன என்பது ஆவணப்பூர்வமான உண்மை.**

2) குற்றமற்ற சமூகம் என்பது கனவு நிலை. பூஜ்ய குற்றம் என்பது உலகில் எந்த காலத்திலும், எந்த ஆட்சியிலும் சாத்தியமானதில்லை. எனவே தனித்த குற்றச் சம்பவங்களை, ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த சட்ட ஒழுங்கு அமைப்பின் முழுமையான சீர்குலைவாக கட்டமைப்பது உள்நோக்கம் கொண்டது.

**ஒரு ஆட்சியின் சட்ட ஒழுங்கு சூழலை எதைக் கொண்டு அளவிடுவது?**

ஒரே காலகட்டத்தில் பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போதும், முந்தைய ஆட்சிகளோடு ஒப்பிடும்போதும் குற்ற நிகழ்வுகள் கூடியுள்ளதா? குறைந்துள்ளதா ? என்பது தான் அளவீடாக இருக்க முடியும்.

மக்கள் தொகைக்கு ஏற்ப குற்ற எண்ணிக்கை அடிப்படையில் (Crime Per Capita) இந்தியாவிலேயே அதிக குற்றங்கள் நடக்கும் மாநிலம் உத்திரபிரதேசம். அதைத்தொடர்ந்து அருணாச்சல் பிரதேசம், ஜார்க்கண்ட், மேகாலயா, டெல்லி, அசாம், சத்தீஸ்கர், ஹரியானா, ஒடிஷா, ஆந்திர பிரதேசம் என்று பட்டியல் நீள்கிறது. இதில் ஆபத்தான 10 மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இல்லை.

**முந்தைய அ.தி.மு.க. அரசோடு ஒப்பிட்டு பார்க்கலாம்.**

தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் அறிக்கை அடிப்படையில், 2020 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடந்த ஐ.பி.சி. குற்றங்கள் 8,91,700. எஸ்.எல்.எல். குற்றங்கள் 4,85,981. மொத்த குற்றங்கள் 13,77,681. அதே கணக்கீட்டின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடந்த ஐ.பி.சி. குற்றங்கள் 1,93,913 எஸ்.எல்.எல். குற்றங்கள் 2,79,543. மொத்த குற்றங்கள் 4,73,456.

அதாவது அ.தி.மு.க. எடப்பாடி பழனிசாமி ஆட்சியை விட, தி.மு.க. ஆட்சியில் ஒரே ஆண்டில் 78.26% ஐ.பி.சி குற்றங்களும், 42.48% எஸ்.எல்.எல் குற்றங்களும், மொத்த குற்றங்களில் 65.67% குறைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போதும், தமிழ்நாட்டின் முந்தைய ஆட்சிகளை ஒப்பிடும் போதும், 'திராவிட மாடல்' அரசு சட்ட ஒழுங்கை சீரோடு பாதுகாத்துள்ளதை மேற்கண்ட தரவுகளின் அடிப்படையில் அறியலாம்.

ஆனால், 'தி.மு.க ஆட்சிக்கு வந்தது முதலே சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருக்கிறது' என்று கொஞ்சமும் நேர்மையின்றி விகடன் எழுதுகிறது. விகடனின் விமர்சனத்தையும், அதிகாரப்பூர்வ தரவுகளையும் ஒப்பிட்டு பார்த்தாலே, அவர்களது வன்மமான கருத்துருவாக்கத்தை புரிந்துகொள்ள முடியும்.

3) "பணப்பிரச்சினை, சொத்துப் பிரச்சினை என்று எதுவாக இருந்தாலும் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கத் தேவையில்லை. நீதிமன்றத்தின் தீர்ப்புக் காகக் காத்திருக்கத் தேவையில்லை" என்று கூலிப்படைகள் திரிவது போலவும், மக்கள் அப்படியான மனநிலைக்கு வந்துவிட்டது போலவும் தோற்றத்தை ஏற்படுத்த முயன்றுள்ளது விகடன்.

**எவ்வளவு ஆபத்தான கருத்தை விதைக்கிறார்கள். ஆட்சியில் இருக்கும் தி.மு.க. வின் மீதான கோபத்தை, விகடன் வேறு வகைகளின் வெளிப்படுத்தலாம். மாறாக மக்கள் மத்தியில் சட்டம் மற்றும் நீதி அமைப்பின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்துவது ஆபத்தானது. அது 'தமிழ்நாட்டிற்கு' நல்லதல்ல.**

Public Affairs Index **போன்ற ஆய்வு அமைப்புகள் அரசியல் நீதியை வழங்குவதில் (சட்ட ஒழுங்கை உள்ளடக்கியது) தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் வகிப்பதாக தொடர்ந்து அறிவித்து வருகிறது. ஆனால் விகடனோ, காவல்துறை உள்ளிட்ட சட்ட அமைப்புகளின் மீது மக்கள் முற்றிலும் நம்பிக்கை இழந்து விட்டதாக நச்சுக் கருத்தை விதைக்கிறது.**

**இதற்கு மாற்றான ஆய்வுகளோ, தரவுகளோ இருந்தால் தாராளமாக குற்றம் சாட்டலாம். ஆனால் எந்த தரவுகளும் இல்லாமல் இவ்வளவு தீவிரமான குற்றச் சாட்டை வைப்பது நேர்மையாகாது.**



சூரியா கிருஷ்ணமூர்த்தி

**இரண்டு நாட்களுக்கு முன்பு கூட மதுரையில் ஒரு கடத்தல் சம்பவம், இரண்டு கோடி ரூபாய் கேட்டு மிரட்டுவதாக பெற்றோர் புகார் அளிக்கிறார்கள். அடுத்த மூன்று மணி நேரத்தில் மாணவனை மீட்டது காவல்துறை. பொதுமக்களுக்கு காவல்துறை மீது நம்பிக்கை இருப்பதால் தான் புகார் அளித்தார்கள், குற்றவாளி களுக்கு காவல்துறை மீது அச்சம் இருப்பதால் தான் மாணவனை விடுவித்தார்கள். ஊடகங்கள் இதனை பேசாது.**

மாறாக செங்கல்பட்டில் கணவன் மனைவி பிரச்சினையில், இரண்டு குழந்தைகளை தாய் அழைத்து சென்ற நிகழ்வை, குழந்தை கடத்தல் என்று தமிழ்நாட்டையே பரபரபாக்கினார்கள்.

4) கள்ளக்குறிச்சி விஷச்சாராய விவகாரத்தில் நடவடிக்கையே எடுக்கவில்லை என்ற தோற்றத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

தி.மு.க. அரசு பொறுப்பெற்ற பிறகு மூன்று ஆண்டுகளில், தமிழ்நாடு முழுவதும் கள்ளச்சாராயம் தொடர்பாக 4,63,710 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 4,61,084 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதில் 565 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

16,51,633 லிட்டர் கள்ளச்சாராயம், 1,42,019 லிட்டர் எரிசாராயம், 28,79, 605 லிட்டர் சாராய ஊறல் அழிக்கப்பட்டுள்ளது.

**கள்ளக்குறிச்சியில் மட்டும் 14,066 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 10 ஆயிரத்திற்கு அதிகமான குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 58 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தில் அடைக்கப்பட்டுள்ளனர்.**

**இவையெல்லாம் கள்ளக்குறிச்சி துயர நிகழ்விற்கு முன்பே நடந்தவை. இவ்வளவு நடவடிக்கைகளையும் மீறித்தான் அத்துயரம் நடந்துள்ளது. கண்காணிக்க தவறிய தொடக்க நிலை காவலர்கள் தொடங்கி மாவட்ட காவல் கண்காணிப்பாளர், ஆட்சியர் வரை அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, துயர நிகழ்வுக்கு பின்பே விழித்தார்கள் என்பது தவறான பரப்புரை. ஊடகங்கள் வெளியிடவில்லை என்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றாகிவிடாது.

இதே கள்ளக்குறிச்சியில் அ.தி.மு.க காலத்திலும் கள்ளச்சாராயம் காய்ச்சப்பட்டது என பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார் மேனாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன். அக்காலத்தில் இது குறித்து எத்தனை தலையங்கங்களை வெளியிட்டது விகடன். 2020 ஆம் ஆண்டு 20 க்கும் மேற்பட்டோர் கள்ளச்சாராயத்தால் மரணம் அடைந்ததாக தேசிய குற்ற ஆவண பதிவேடு சொல்கிறது. அப்போதெல்லாம் 'யாருடைய ஆட்சி' என்று எத்தனை கட்டுரைகளை தீட்டியது விகடன் ? எந்த எந்த நிகழ்வுகளில் மரணம் என்று பட்டியலை கூட இவர்களால் வெளியிட முடியாது, அது தான் இவர்களின் ஊடக அறம்.

5)தூத்துக்குடியில் வாழ்வுரிமைக்காக போராடியவர்களை துள்ளத்துடிக்க சுட்டுக் கொன்றுவிட்டு, தொலைக்காட்சியில் பார்த்து தெரிந்து கொண்டேன் என்று சொன்னவர் எடப்பாடி பழனிசாமி.

**சாத்தான்குளம் காவல் நிலையத்தையே மரண பலிபீடமாக அ.தி.மு.க. ஆட்சியில் மாற்றினார்கள். ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகிய இருவரையும் 20-க்கும் மேற்பட்ட காவலர்கள் அடித்தே கொன்றார்கள். 'பென்னிக்ஸ் மூச்சுத் திணறலால் இறந்தார், ஜெயராஜ் உடல் நலம் பாதிக்கப்பட்டு இறந்தார்' என்று அறிக்கை வெளியிட்டார் அன்றைய முதலமைச்சர் பழனிசாமி. வரலாற்றில் முதல்முறையாக சாத்தான்குளம் காவல்நிலையத்தை காவல் துறையிடம் இருந்து மீட்டு, வருவாய் துறையிடம் ஒப்படைத்தது நீதிமன்றம். காவல் நிலையத்தையே கட்டுப்படுத்த முடியாதவர்களாக அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் காவல்துறை இருந்தது வரலாறு.**

**2017ஆம் ஆண்டு ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு, நீலகிரியில் உள்ள ஜெயலலிதாவின் கொடநாட்டில் ஒரு கொலையும் கொள்ளையும் நடந்தன. திருட்டில் தொடர்புடைய மூன்று பேர் இறந்தனர் இரண்டு விபத்துகளில் மற்றும் ஒருவர் தற்கொலை. வியாபம் ஊழலில் தொடர்புடையவர்கள் எல்லாம் மர்மமாக இறந்தது போல தமிழ்நாட்டிலும் நடந்தது. அதுவரை தமிழ்நாடு காணாத கொடூரங்கள் அவை. இதில் அன்றைய முதலமைச்சர் பழனிசாமி மீதே வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. எவ்வளவு பெரிய அவமானம்.**

**மறுபுறம், 2018 ஆம் ஆண்டு இருசக்கர வாகனத்தில் சென்ற தம்பதியை போக்குவரத்து காவல் ஆய்வாளர் எட்டி உதைத்ததில் கீழே விழுந்து உஷா என்ற கர்ப்பிணி பெண் சம்பவ இடத்திலேயே பலியானர். அவரது வயிற்றில் இருந்த சிசுவும் பரிதாபமாக உயிரிழந்தது.**

**திருப்பூரில் மதுக்கடையை மூடக்கோரி போராடிய பெண்ணை பொதுவெளியில் அறைந்து, செவித்திறன இழக்கச் செய்த காவலர் போன்ற செய்திகள் தினசரி நிகழ்ந்தன.**

**குற்றவாளிகளுக்கு முழுச் சுதந்திரம், காவல்துறையின் கொடுங்கரங்கள் அப்பாவி பொதுமக்களை கொன்று குவித்தது, எதற்கும் பொறுப்பேற்காத ஆணவம் என்று தமிழ்நாட்டின் சட்ட ஒழுங்கை முற்றாக சீரழித்துவிட்டு போனார் பழனிசாமி.**

இன்று மொத்த குற்றங்கள் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன. குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்த ப்பட்டுள்ளன, குற்றம் நடந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது, கண்காணிக்க தவறிய அரசு மற்றும் காவல் அதிகாரிகள் மீதும் நடவடிக்கை பாய்கிறது. குற்றவாளிகள் யாரையும் இந்த அரசு எப்போதும் காப்பாற்ற முயற்சிக்கவில்லை. முன்விரோதத்தின் காரணமாக நடைபெறும் அரசியல் கொலைகளுக்கு பின்னரும் கூட துளி வன்முறை கூட நிகழா வண்ணம் பொது அமைதி பேணப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக நீதியரசர் சந்துரு ஆணையம் போன்று நீண்ட கால செயல் திட்டத்தை இந்த அரசு சிந்திக்கிறது.

ஒட்டுமொத்தமாக அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் சீரழிந்து கிடந்த சட்ட ஒழுங்கை சீர்படுத்தி வருகிறது தி.மு.க. அரசு.

உண்மை நிலையும், தரவுகளும் இப்படி இருக்கும்போது, எந்த அடிப்படை தரவுகளும் இல்லாமல் தனித்த நிகழ்வு களை அடிப்படையாகக் கொண்டு, ஒட்டுமொத்த சட்ட ஒழுங்கும் சீர்குலைந்ததாக விகடன் எழுதும் நோக்கம் என்ன ?

**அது ஒரு அரசியல் கட்சியின் செயல்திட்டம். தி.மு.க. வை அரசியல் ரீதியாக வீழ்த்த முடியாதவர்கள் அவதூறுகளால் வீழ்த்த முயற்சிக்கிறார்கள். அதற்கு இவர்கள் துணை போகிறார்கள்.**

குற்றவாளிகளை அதிக அளவில் கட்சியில் சேர்க்கிறார்கள் என்று பா.ஜ.க.வின் மேனாள் தலைவர் தமிழிசை சௌந்தர்ராஜன் வெளிப்படையாக பேசும் அளவிற்கு, குற்றவாளிகளின் வேடந்தாங்களாக பா.ஜ.க. உருவெடுத்துள்ளது.

ஒருவகையில் குற்றவாளிகளுக்கு பாதுகாப்பு அளிப்பது. மறுபக்கம் சட்ட ஒழுங்கு சீர்கேடு என்று கருத்துருவாக்கம் செய்வது என நாடகம் போடுகிறது சங்கிக்கூட்டம்.

**இந்த அரசியல் சதித்திட்டத்தை வி.சி.க. தலைவர் முனைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. அம்பலப்படுத்தியுள்ளார்.**

இத்திட்டத்திற்கு வடிவம் கொடுக்கும் வகையில் ரவுடிகளை கட்சியில் நிறைக்கும் அண்ணாமலையை, 'தற்சார்பு வாழ்க்கை', 'கர்நாடக சிங்கம்' என்று புனிதப்படுத்தி அறிமுகப்படுத்தியதும் விகடன் வகையறாக்கள் தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

'2026லும் நாங்கள்தான் வென்று ஆட்சி செய்வோம்' என்ற முதல்வர் ஸ்டாலினின் முழக்கத்தைக் கேட்டு சமூக விரோதிகள்

உள்ளுக்குள் சிரித்துக்கொள்கிறார்கள்' என்று வன்மமாக முடித்திருக்கிறது விகடன்.

உண்மையில் 2026லும் தி.மு.க. ஆட்சி என்பதை தமிழ்நாட்டு மக்கள் உள்ளார்ந்த உவகையோடு வரவேற்கிறார்கள். அதற்கு நாடாளுமன்ற பொதுத்தேர்தல் முடிவுகளே சான்று. தமிழ்நாட்டின் நலனுக்கு எதிரான சக்திகளுக்கும், அவர்களுக்கு துணை போகும் படை பரிவாரங்களுக்கும் மட்டும் தான் அது கண்ணீரை வரவழைக்கும் செய்தி.

**உங்கள் நச்சுக் கருத்துருவாக்கங்களை, நெருப்பாறுகளை நீந்தி கடந்த இயக்கம் நாங்கள், உண்மையான தரவுகளை கொண்டு உடைத்தெறிவோம்!**

**தமிழ்நாட்டு மக்கள் அறிவார்ந்தோர், அவர்கள் அனைத்தையும் அறிவர்.**



விக்கிரவாண்டி இடை தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா அமோக வெற்றி பெற்றதை வரவேற்றுவிழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டிவனம், மற்றும் மயிலம் தொகுதி தீவனூரில்,சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர் . உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், மாவட்ட பொருளாளர் ரமணன், திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன், மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.


### விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியின் பிரம்மாண்டமான வெற்றி!

# தமிழ்நாடு முதலமைச்சருக்கு பாராட்டுகள்!

## கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி ஈ.ஆர்.ஈஸ்வரன் அறிக்கை!

சென்னை, ஜுலை 14-

இதுகுறித்து கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-



விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் பெற்றிருக்கின்ற பிரம்மாண்டமான வெற்றி தமிழ்நாடு முதலமைச்சரின் திட்டங்கள் மக்களை சென்றடைந்திருப்பதை நிருபிக்கின்றது. இன்னும் நிறைய திட்டங்களை அடித்தட்டு மக்களுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் செய்வார் என்று மக்கள் நம்புவதை இந்த இடைத்தேர்தல் முடிவுகள் காட்டியிருக்கின்றது.

தமிழ்நாடு அரசு இன்னும் அதிக பாய்ச்சலோடு செயல்படுகின்ற ஊக்கத்தை, பொறுப்பை கொடுத்திருக்கிறது. எதிர் பார்த்த வித்தியாசத்தோடு அன்னியூர் சிவா அவர்கள் வெற்றி பெற வைத்திருக்கின்ற விக்கிரவாண்டி வாக்காள பெருமக்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் கூட்டணி கட்சிகளுடைய தேர்தல் பிரச்சா ரங்கள் எடுபடவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் காட்டியிருக்கின்றது.

ஏன் பா.ம.க. வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்று தெளிவாக பேசுகின்ற நிலையில் பி.ஜே.பி. தலைமையிலான கூட்டணி இல்லை என்பதை காட்டுகிறது. இவ்வளவு பெரிய வெற்றிக்கு காரணமாக இருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஆ.இராசா.எம்.பி. - அமைச்சர் சா.சி.சிவசங்கர் - கே.என்.அருண்நேரு.எம்.பி. பங்கேற்பு!

# பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், ஜுலை,15

பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு பெருவிழாவை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், நாளை (16.07.2024) காலை 10 மணியளவில், பெரம்பலூர் to அரியலூர் சாலையில் உள்ள, பூமணம் திருமண மண்டபத்தில், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில், பெரம்பலூர் நகரக் கழகச் செயலாளர் எம்.பிரபாகரன். எம்.எல்.ஏ., வரவேற்புரையில்,

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில், கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி., போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கே.என்.அருண்நேரு.எம்.பி., கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

பெரம்பலூர் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் நன்றியுரையாற்றுகிறார். அதேபோல் பெரம்பலூர் ஒன்றிய தி.மு.க.சார்பில் பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் லக்ஷ்மன் ஸ்ருதி இன்னிசைக் கச்சேரியுடன் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம், நாளை (16.07.2024-செவ்வாய்க்கிழமை,) மாலை 6.00 மணிக்கு நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக செயலாளர்கள், வார்டு கழக செயலாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் அரூர் பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்தி, அரூர் அரசு மருத்துவமனைக்கு விரிவாக்கம் செய்ய ரூ.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு வேளான்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனையின்படி,மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன்,தருமபுரி நாடளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி ஆகியோர் தலைமையில் அரூர் நகர கழக செயலாளர் முல்லைரவி ஏற்பாட்டில் பேரறிஞர் அண்ணா, அண்ணல் அம்பேத்கர் ஆகியோர் சிலைகளுக்கு மாலை அணிவித்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.உடன் ஒன்றிய கழக செயலாளர் வே.சௌந்தரராசு,ஆர்.வேடம்மாள், கோ. சந்திரமோகன்,அரூர் பேரூராட்சி தலைவர் துணைத் தலைவர் இந்திராணிசூர்யா தனபால்,மாவட்ட ஐடி விங் ஒருங்கிணைப்பாளர் கு.தமிழழகன்,விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் சாக்கன்சர்மா, மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தொகுதிக்குட்பட்ட அலங்கார மங்கலம், பாடகம், அணியாலை, சாம்பட்டு, சீட்டம்பட்டு, கலசப்பாக்கம், பழங்கோயில், காப்பலூர் உள்ளிட்ட 24 கிராமங்களில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.